ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

12.12.2024

1. சோதியுட் கலந்து அரங்கனும்
சோதியாய் அருள்வேன் என் மக்கட்கு
விதி வெல்லும் மகா சக்தியாக
விரைந்து யானே வந்தருள

2. அருளுவேன் குரோதி தேள் திங்கள்
ஆற்றல்பட சதுர் குருவார அருளாசி
வரமென என் மக்கள் பாதுகாப்புற
வழங்குவேன் அரங்கனும் வார ஆசிதனை

3. ஆசிதனை பிரணவக் குடிலணுகி
அனைவரும் சோதி வழிபாடு செய்து
ஆசி வேண்டித் தொடரவே
அவரவர்க்கும் சக்தியூட்டி காப்பேன்

4. காப்பாக அவரவர் விருப்பங்களும்
கவலை தீர வேண்டுதல்களும்
ஒப்பு கொண்டு அரங்கன் யானும்
உடன் இறங்கி நிறைவேற்றுவேன்

5. ஆகவே கிளைச் சங்கங்களும்
அதன் வழி தொண்டர் பெருமக்களும்
வகைபட ஞானிகள் பூசை செய்து
வழங்கி வரும் தரும சேவைக்கு பாதுகாப்புத் தா

6. தா என வேண்டி வருகவே
தவராஜனும் எண்ணிய கணமே
வந்தேன் என இறங்கி அருளி
வல்லமைபட பாதுகாப்புத் தந்து

7. தந்துமே தரும சேவை தடைபடா
தக்க தன வரவு குன்றாதபடி
சிந்தை வழி பொருளாதார உதவியும்
செல்வந்தர்களை தானாக வந்துதவிடச் செய்து

8. செய்துமே கிளைகள் யாவிலும்
சிறப்பாய் தருமம் வளரவும்
மெய்யான தொண்டர் பெருமக்கள்
மேலும் சேரவும் அருளுவேன்

9. அருளுவேன் அவரவர் தனிப்பட்ட
அகமும் புறமும் பாதுகாப்புற
வரமென அவரவர் குடியவர்க்கும்
வசதி வளமும் தேவை பெருகவே

10. பெருகவே அதற்கேற்ற பொருள் வளமும்
பெற்றுச் சிறக்க அரங்கன் அருள்வேன்
வரமாக இல்லறக் கடமையோடு
வாழ்வில் மற்றவர்க்கும் உதவி

11. உதவியே பிறர் துன்பமும் போக்கி
உயர் வள்ளலாய் தொண்டர்கள்
மேதகு நிலை கண்டு வாழ அருள்வேன்
மீண்டும் பிறவா நல்வரமும் தருவேன்
ஆறுமுக அரங்கன் யான்
அருளிய குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி